தலைவருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளதை ஏற்று டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் பேரவையில் "எந்தக் கட்சியையும் சாராத உறுப்பினர் "unattached member" என்று அறிவிக்கிறேன்.

என்னுடைய அறிவிப்பில் மேலும் சட்டப்பேரவை விதி 6-ன் கீழ் இவரது இருக்கை சம்பந்தமாக தனியாக ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

4. கவன ஈர்ப்பு.

வடஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், பெண்ணாத்தூர் பேரூராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடஆற்காடு — அம்பேத்கார் மாவட்டம், பெண்ணாத்தூர் பேரூராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பெண்ணாத்தூர் பேரூராட்சியில் மொத்த மக்கள் தொகை 7,368 ஆகும், தற்போது இப்பேரூராட்சி மக்களுக்கு கீழ்க்கண்ட குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் சீரான முறையில் தினமும் விநியோகிக்கப்பட்டு வருகிறது:—

(அ) திறந்தவெளி கிணறுகள் .. 27

(ஆ) கைப்பம்பு 26

(இ) தரைமட்ட விசைப்பம்பு மூலம் 8

(ஈ) பொதுக் குழாய்கள் .. 71

இப்பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தினை அமுல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுப் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணிகள் முடிவுற்றதும், மதிப்பீடு தயாரித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த ஒரு வார காலத்திலேயே இந்த பேரூராட்சியினுடைய நிலைமை என்ன? குடிநீர் தட்டுப்பாடு என்ன? என்பதை எல்லாம் சிறப்பான முறையில் நல்ல கருத்தை விளக்கமாக தந்துள்ளார்கள். அதற்காக அவருக்கு என்னுடைய தொகுதி வாழ் இந்த பெண்ணாத்தூர் பேரூராட்சி மக்கள் சார்பாக நன்றியைக் கூறிக்கொள் கிறேன்.

முற்பகல் 11-30

அதே நேரத்தில் நம்முடைய புரட்சித்தலைவி அவர் களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, ஏறத்தாழ கணியம்பாடி ஒன்றியத்திலேயும், போளூர் ஒன்றியத்திலேயும் என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 25, 26 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மேல் கட்டப் பட்டு எல்லா மக்களுக்கும் நல்லமுறையில், சிறப்பான முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்தப் பெண்ணாத்தூர் பேரூராட்சியைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 5, 6 கிராமங்கள் கொண்ட ஒரு பெரிய பேரூராட்சியாகும். இந்தக் கிராமத்தில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் பல மேல்நிலை தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டும் குடிநீர் வழங்கப்படாமல் உள்ளது. அதேபோல, திறந்தவெளி கிணறுகளிலும் குடி நீர் வற்றியுள்ள காரணத்தினால் மக்களுக்கு குடிநீர் இல்லாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட கருத்துக்களை யெல்லாம் கொண்டு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், இந்த பெண்ணாத்தூர் பேரூராட் சிக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் எல்லாப் பகுதி, மக்களும் பயனடைய வேண்டுமென்று ஒரு திட்டம் வகுத்திருக்கிறார் என்பதை நான் வடஆற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் மூலம் தெரிந்திருக்கிறேன். ஆனால், அப்படிப்பட்ட திட்டத்திற்கும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன், விளக்கத்தைக் கேள்வியாகக் கேளுங்கள். வைக்கப்பட்டிருக்கிற அறிக்கை மீது ஒரு கேள்வி கேளுங்கள்.

1993 ஏப்ரல் 8]

திரு. தா. வேடியப்பன் : அப்படிப்பட்ட திட்டப் பணிகளெல்லாம் தொடர்ந்து நடைபெற்று ஆழ்துளைக் கிணறுகளுக்கெல்லாம் பாயிண்டுகள் எல்லாம் ஃபிகஸ் பண்ணியிருக்கிறார்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன், விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது, குற்றச் சாட்டுகள் சொல்லக்கூடாது. கேள்வி நேரத்தின் போதும், இந்த நேரத்திலும், வேறு குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்று இருக்கிறது. அது நீக்கப்படுகிறது. என்ன அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறதோ அதிலே உங்களுடைய விளக்கத்தை மட்டும் கேளுங்கள். ஒரே ஒரு கேள்வி மூலம் கேளுங்கள்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாத்தூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கு பாயிண்டுகள் பார்க்கப்பட்டு, ஆழ் துளைக் கிணறுகளையெல்லாம் சரியான முறையில் அமைத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அந்தப் பகுதி மக்க ளுக்கு குடிநீர் வழங்க, நம்முடைய புரட்சித் தலைவி யினுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரூராட்சிக்கு பாது காக்கப்பட்டு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நடைபெறுகிற ஆய்வுப் பணிகளை விரைவில் முடிப்ப தற்கும், அதற்குப்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கக்கூடிய நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியில் இப்படி கிராமங்களையெல்லாம் நகரங்களாக ஆக்குவதற்கு கிராமப் பகுதி மக்களுக்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசுக்கும் உளங்கனிந்த நன்றியைக் கூறிக்கொண்டு, அடுத்த நிதி ஆண்டிலாவது இந்த பெண்ணாத்தூர் பேரூராட்சிக்கு குடி நீர் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் முடிவுற்றதற்குப் பின்னால் இதுபற்றி பரிசீலிக்கப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவனஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ம. சின்னசாமி பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

"இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வேளாண்மைத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை" நன்றி, வணக்கம்.

6 அறிவிப்பு.

கேளிக்கை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.